பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 05 2024 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சியை தீர்மானிப்பதில் அடுத்த ஐந்தாண்டுகள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

3. சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இரண்டு மாவோயிஸட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

4. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதை அடுத்து, பொதுமக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

5. சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து மற்றும் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>><<<<

7வது மற்றும் இறுதிக்கட்ட மக்களவைத் தேர்தல் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அத்தொகுதிகளில் அரசியல் கட்சிகள் முழுவீச்சில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன.

பொதுக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளில் பங்கேற்பதோடு, மக்களை நேரடியாக சந்தித்து அரசியல் கட்சித் தலைவர்கள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று மேற்குவங்கத்தில் உள்ள **Mathurapur-**ல் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்டு பேசினார்.

கடந்த 10ஆண்டுகளில் பிஜேபி அரசு 4 கோடி ஏழை மக்களுக்கு வீடுகளை வழங்கியிருப்பதாக தெரிவித்தார்.

இந்தியாவின் வளர்ச்சியை தீர்மானிப்பதில் அடுத்த ஐந்தாண்டுகள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

பீகாரில் உள்ள **Bikramganj-**ல் பிஜேபி மூத்த தலைவர் திரு. ராஜ்நாத் சிங் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

52 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி, அதனை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

**Sasaram**தொகுதியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசிய லோக் ஜனசக்தி கட்சியின் ராம்விலாஸ் பிரிவு தலைவர் திரு. ஷிராக் பாஸ்வான், இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அதிக இடங்களை பெறும் என்று தெரிவித்தார்.

பாட்னாவில் இன்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் திரு. தேஜஸ்வி யாதவ், கடந்த பத்தாண்டுகளில் செய்த சாதனைகள் குறித்த புள்ளி விவரங்களை பிஜேபி வெளியிடவில்லை என்று குற்றம் சாட்டினார்.

பஞ்சாப் மாநிலம், லூதியானாவில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசினார்.

விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ அந்தஸ்து கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பஞ்சாபில் உள்ள இளையோரை போதை பழக்கத்தின் பிடியிலிருந்து மீட்கும் வகையில், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, இன்று ஜார்க்கண்ட் மாநிலம், **Dumka-**வில் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் உள்ள பல தலைவர்கள், ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியிருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, இன்று ஒடிசா மாநிலம், **Bhadrak-**ல் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசினார்.

ஒடிசா மக்களின் முன்னேற்றத்திற்காக அம்மாநில முதலமைச்சர் திரு. நவீன் பட்நாயக் எந்த திட்டத்தையும் செயல்படுத்தவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

மேலும், திரு. நரேந்திர மோடி கடந்த தேர்தல் பிரச்சாரங்களின் போது அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என்றும் திரு. மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

**>>>><<<<**

தொலைபேசி வழி மனநல ஆலோசனைகளை வழங்கும் **Telemanas – Helpline,** 2022 அக்டோபர் முதல் தற்போது வரை, 10 லட்சம் அழைப்புகளை பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் 51 இடங்களில் இந்த சேவை செயல்படுத்தப்படுகிறது.

மனநல ஆலோசனைகளை பெற விரும்பும் அனைவருக்கும் அது கிடைக்கும் வகையில், இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**>>>><<<<**

உயர்தர மருந்துப் பொருட்கள், அனைவருக்கும் கிடைக்கும் வகையில் உலக சுகாதார அமைப்புடன் சேர்ந்து இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திரு. **Apurva Chandra** தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற 77வது உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் பேசிய அவர், மக்கள் சுகாதாரத்துடன் வாழ்வதற்கான பல்வேறு திட்டங்களை இந்தியா செயல்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளின் இறப்பு விகிதம் பெருமளவு குறைந்திருப்பதாக திரு. **Apurva Chandra**கூறினார்.

**>>>><<<<**

குடிநீரை வீணாக்குவோரை கண்டறிந்து, அபராதம் விதிப்பதற்காக 200 குழுக்களை தில்லி அரசு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய தில்லி நீர்வளத்துறை அமைச்சர் திருமதி. **Atishi Marlena**நாளை முதல் இந்தக் குழுக்கள் தங்களது கண்காணிப்புப் பணியை தொடங்கும் என்றும், குடிநீரை வீணாக்குவோருக்கு 2 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வாகனங்களை சுத்தம் செய்வது, நீர்த்தொட்டிகளிலிருந்து உபரி நீர் வழிவது, வணிக வளாகங்களில் வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட குடிநீர் இணைப்பை பயன்படுத்துவது, முறைகேடாக குடிநீர்

இணைப்புகளை பெறுவது போன்றவற்றை இந்த் குழுக்கள் கண்காணிக்கும் என்று தில்லி நீர்வளத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகலயா, சிக்கிம் மற்றும் மேற்குவங்கத்தில் உள்ள இமயமலையை ஒட்டிய பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் தெற்கு கர்நாடகாவின் ஒருசில பகுதிகளில் அடுத்த மாதம் 1 மற்றும் 2ஆம் தேதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும், கேரளா மற்றும் மாஹே-வின் சில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய வடமாநிலப் பகுதிகளில் அரபிக்கடலிலிருந்து தென்மேற்கு திசையில் வீசும் காற்றின் காரமணாக, வெப்ப அலையின் தாக்கம் அடுத்த மாதம் 1ஆம் தேதிக்குப் பிறகு படிப்படியாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தில்லியில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பிற்பகல் 12 மணி முதல் 3 மணிவரை ஊதியத்துடன் கூடிய ஓய்வு வழங்க வேண்டும் என்று தில்லி துணைநிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா உத்தரவிட்டுள்ளார்.

அதிக வெப்பமான சூழலில் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை தில்லி பொதுப்பணித்துறை உறுதி செய்ய வேண்டும் என்றும்தில்லி துணைநிலை ஆளுநர் கூறியுள்ளார்.

>>>><<<<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனல் காற்றின் தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து, பொதுமக்கள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், பொதுமக்கள் போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அத்தியாவசிய பணிகளுக்கு மட்டுமே வீட்டை விட்டு வெளியே வருமாறு திரு. மன்சுக் மாண்டவியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

>>>><<<<

ரெமால் புயலால் ஏற்பட்ட கனமழை மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக, நாட்டின் வடகிழக்கு பகுதியில் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில், அப்பகுதியில் புயல் காரணமாக, 33 பேர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

திரிபுரா, மணிப்பூர், மிஸோரம், பாரக் பள்ளத்தாக்கு பகுதிகளை, வடக்கு அஸ்ஸாமுடன் இணைக்கும் சாலைகள் நிலச்சரிவினால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

அங்குள்ள நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அஸ்ஸாம் மாநிலம்**Hojai, Karimganj**உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

>>>><<<<

நாட்டின் பொருளாதாரம் கடந்த நிதியாண்டின் நான்காவது காலாண்டுப் பகுதியில் ஏழு புள்ளி நான்கு சதவீதம் வளர்ச்சியை எட்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பாரத ஸ்டேட் வங்கியின் பொருளாதார ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த நிதியாண்டில் நாட்டின் வளர்ச்சி விகிதம் எட்டு சதவீதத்தை எட்டும் என்றும் அது கூறியுள்ளது.

கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 புள்ளி எட்டு சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் 7 புள்ளி ஆறு சதவீதமாகவும், 3வது காலாண்டில் 8 புள்ளி 4 சதவீதமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

சத்திஷ்கர் மாநிலம், **Bijapur** மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் இன்று மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஒரு பெண் உட்பட இரண்டு மாவோயிஸ்ட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பெண் மாவோயிஸ்ட் குறித்து தகவல் தெரிவிப்போருக்கு 8 லட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று ஏற்கனவே அம்மாநில அரசு அறிவித்திருந்தது.

கொல்லப்பட்ட மாவோயிஸ்ட்களிடமிருந்து இரண்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**>>>><<<<**

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 22-20 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் **Line Hojmark Kjaersfeldt-**யை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Prannoy** 21-9, 18-21, 21-9 என்ற செட்கணக்கில் பெல்ஜியத்தின் **Julien Carraggi-**யை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அந்த இணை சீனாவின் **Cheng-Sun** இணையை 21-7, 21-14 என்ற செட்கணக்கில் வீழ்த்தியது.

**>>>><<<<**

ஒலிம்பிக் தகுதிச்சுற்று குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Ankushita Boro** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தின் பேங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 60 கிலோ எடைப்பிரிவு, காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் கஜகஸ்தானின் **Rimma Volossenko-**வை வென்றார்.

மகளிர் 66 கிலோ எடைப்பிரிவில் **Arunthati Choudhary** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள இந்திய அணி இன்று நியூயார்க்கில் பயிற்சியில் ஈடுபட்டது.

**>>>><<<<**

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான 23 பேர் கொண்ட இந்திய அணி, ஜெர்மனி புறப்பட்டுச் சென்றது.

இப்போட்டி **Munich-**ல் நாளை மறுநாள் தொடங்கி, அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**>>>><<<<**

ஆசிய மகளிர் சேலஞ்சர் கோப்பைக்கான வாலிபால் போட்டியில் இந்தியா 5வது இடத்தை பிடித்தது.

ஃபிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற 5வது இடத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 25-17, 25-16, 25-11 என்ற புள்ளிக்கணக்கில் ஈரானை வென்றது.

**>>>><<<<**

இலங்கையில் நடைபெற்ற தெற்காசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

**>>>>END<<<<**